தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௫ மலர்: க

திருவள்ளுவர் யாண்டு ௨௦௧௨
துன்மதி: புரட்டாசி
(1981 செப்டம்பர்–அக்டோபர்)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர் :
திரு அரங்க வே. சுப்பிரமணியன்,
பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர் : ருரு     உள்ளுறை     மலர் : ரு


பக்கம்

1 வள்ளலார் வகுத்த பெரு நெறி .... 123

பேராசிரியர். வ. பெருமாள்,
எம். ஏ; பி. டி;
எம். ஆர். ஏ. எசு; எப். எப். ஐ;
தலைமைப் பேராசிரியர் மற்றும்
தலைமை ஆராய்ச்சி நெறியாளர்,
பண்பகம், இராபர்ட்சன் பேட்டை,
சொர்ண நகர், கோலார் தங்கவயல் (K. G. F.)
கருநாடகம். 563122

2 பிறர்க்குதவி செய்யார்
பெருஞ் செல்வம் .... 130

தி. கோ. பஞ்சாபகேசன்,
திருவிடைமருதூர்.

3 ஒரு பறவைப் பார்வையில் ....
தமிழாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் .... 132

சி. கோ. தெய்வநாயகம்,
எம். ஏ; எம். ஃபில்;
காந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

4 காஞ்சிப்பாட்டு .... 135

K. சோமசுந்தரம், B. A; B. L;
தஞ்சை.

5 தமிழில் மரபு மீறல்கள் .... 141

செஞ்சொற் கொண்டல், தமிழாகரர்
டாக்டர் சொ. சிங்காரவேலன்,
எம். ஏ; பிஎச். டி;
தமிழ்ப் பேராசிரியர்,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

# தமிழ்ப் பொழில்

காரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உ0கஉ | மலர் |
| --- | --- | --- |
| ருரு | துன்மதி-புரட்டாசி | ரு |
| | 1981 செப்டம்பர்—அக்டோபர் | |


தமிழ் வாழ்க!

# வள்ளலார் வகுத்த பெருநெறி


பேராசிரியர் வ, பெருமாள்

எம். ஏ; பி. டி; எம். ஆர். ஏ. எசு; எப். எப். ஐ;

தலைமைப் பேராசிரியர் மற்றும் தலைமை ஆராய்ச்சி நெறியாளர்.,

பண்பகம், இராபர்ட்சன் பேட்டை,

சொர்ண நகர், கோலார் தங்க வயல் (K. G. F.) 563 122

கருநாடகம்.


## முன்னுரை:

உலகத்தில் பல நெறிகள் உண்டு; ஒவ்வொரு நெறியும் ஒவ்வொரு துறையில் சிறப்புடன் திகழ்கின்றது. எல்லா நெறிகளிலும் விளங்குகின்ற சிறப்பு இயல்புகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது வள்ளலார் கண்ட சமரசப் பெருநெறி. சமரச சன்மார்க்கம் ஒரு சமயமோ மதமோ அன்று. மக்கள் அனைவரும் பின்பற்றத்தக்க தூய நன் மார்க்கமாகும். அந் நன்மார்க்கத்தின் ஒருசில சிறப்புக்களை மட்டும் இவண் ஆராய்வோம்.

## அன்பு நெறி:

மனைவி, மக்கள் சுற்றத்தார், நண்பர் ஆகியோர்மாட்டு இயல்பாக உள்ளத்தில் எழுகின்ற பற்றே அன்பு எனப்படும். மன மலர்ச்சியின் முதல் நிலையே அன்பாகும். மக்கள் இயைந்து வாழவும் இணைந்து வாழவும் அன்பாகிய பிணைப்பு மிகவும் அவசியமாகும். நெஞ்சத்தில் அன்பில்லாத மக்கள் இவ்வுலகில்

இருந்தும் பயனில்லை. தண்ணீர் இல்லாத குளம் எத்துணைப் பெரியதாயினும் அது பிறர்க்குச் சிறிதேனும் பயன்படுத லில்லை. அதுபோலவே அன்பில்லாத மனிதன் மற்ற துறைகளில் எத்துணைப் பெரியவனாக இருப்பினும் அவனால் மக்கட்கு யாதொரு பயனு மில்லை. ஈரம் மென்மையாக இருந்து இரண்டு பொருள்களை ஒட்ட எவ்வாறு பயன்படுகிறதோ அதுபோல் அன்பு மென்மையாக அமைந்து இரு உள்ளங்களையும் இணைக்கத் துணைபுரிகின்றது, எனவே அன்பிற்கு ஈரம் என்று பெயர். அன்பில்லாதவனை நெஞ்சில் ஈரமில்லாதவன் எங்கிறோம். இராமலிங்க சுவாமிகள் இறைவனை வேண்டும்போது,

''அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்''

என்று அன்பையே உள்ளன்புடன் வேண்டுகின்றார். எனவே, வள்ளலார் நெறி — அன்புநெறி என்பது புலனாகும்.

**அருள் நெறி:**

அன்பு நன்றாக மலர்ந்து நாற்றிசையிலும் தூய நறுமணம் பரப்பும் போது அருளாகக் காட்சி அளிக்கின்றது. அறிந்தவர்களிடத்தில் மட்டும் செல்லக்கூடிய பற்றுணர்ச்சி அன்பு என்று குறிக்கப்படும். அறியாதவர் இடத்தும் செல்லக் கூடிய பற்றுணர்ச்சி அருள் எனப்படும். அன்பு மலர்கின்ற பூப் போன்றது. அன்பை அரைகுறையாக பழுத்த பழத்திற்கு ஒப்பிடலாம். அருளை நன்றாகப் பழுத்த கனிக்கு ஒப்பிடலாம். அன்பில்லாவிட்டால் அருள் இல்லை. அன்பின் நோக்கம் அருள் நிலையை அடைவதே. தன்னலம், பொதுநலம் ஆகிய இரண்டிலும் அமைந்தது அன்பு. பொதுநலத்தின் அடிப்படையில் அமைந்தது அருள். வள்ளலார் நெறி அன்பில் தொடங்கி அருளில் முடிகின்றது. அருள் நெறியில் இறைவனை அடைந்த வள்ளலார்க்கு, இறைவன் அருள் ஒளியாகவே காட்சி அளித்தான். வள்ளலார் கண்ட இறைவன்.

அருட் பெருஞ் சோதி! தனிப் பெருங் கருணை!

அவர் பாடியது திருவருட்பா (திரு அருள் பாட்டு)

**இரக்க நெறி:**

பிற உயிர்கள் துன்பப் படுங்காலை இயல்பாக ஏற்படுகின்ற மன வருத்தத்திற்கு இரக்கம் என்று பெயர். பிறர் அல்லலைக் கண்டு அதன் பயனாக உள்ளத்தில் ஏற்படுகின்ற நெகிழ்ச்சியே இரக்கமாகும். எவனொருவன் பிறர் துயரைத் தன் துயர்போல்

நினைத்து அதற்காக உளம் வருந்துகின்றானோ அவன்தான் உண்மையான இரக்கமுள்ள மனிதன். இரக்கம் என்னும் தூய உணர்ச்சி, சாதி, சமயம், மொழி, இனம், நாடு ஆகிய எல்லாவற்றையும் கடந்து செல்லக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. உயர்திணையோடு மட்டும் அமையாது அஃறிணையிடமும் விரைந்து செல்லக் கூடிய பாச உணர்ச்சியே இரக்கம் எனப்படும். வாடிய பயிரையும், வாடிய மக்களையும் கண்டபோது வள்ளலார் மனம் வருந்தினார்; மனம் நொந்தார்; மனம் வாடினார்; மனம் பதைத்தார்.

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மானிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''

—திருவருட்பா

மக்களுக்கு இரக்க உணர்ச்சி வேண்டும் என்று வள்ளலார் நீண்ட அறவுரை கூறினார் அல்லர்; வள்ளலார் வாழ்ந்து காட்டினார். ஆயிரம் நீதிகளைப் பிறர்க்கு எடுத்துரைப்பவனை விட, ஒரே ஒரு நீதியையாவது செயலில் கடைப் பிடிப்பவனுக்கு உயர்வு மிகுதி. அடிகளார் சொல் வீரர் அல்லர்; செயல் வீரர். அவர் வாழ்வின் கண்ணாடியே மேற்காட்டியுள்ள பாட்டாகத் திகழ்கின்றது.

**அறிவு நெறி:**

பக்தி இருவகைப்படும். ஒன்று தெளிந்த பக்தி, மற்றொன்று குருட்டு பக்தி. அறிவும் தெளிவும் உறுதியும் ஏற்பட்டு அதன் நற்பயனாக உள்ளத்தில் தோன்றுகின்ற தூய உணர்ச்சியே பக்தி எனப்படும். அறிவு ஒளி மிகுதியாக, அறியாமையாகிய மருள் நீங்கும். உயிர், உலகம், இறைவன் ஆகியவைகளைப் பற்றிய உண்மைகளைக் கசடற அறிந்து, தெளிந்து, உணர்ந்து மெய்ப் பொருள்களை அடைகின்ற நெறியே அறிவு நெறி (ஞான மார்க்கம்) எனப்படும். மாணிக்கவாசகர் ஞான மார்க்கத்தைப் பின்பற்றியவர். வள்ளலார் நெறியும் ஞான மார்க்கமேயாகும். எத்தகைய நல்ல செயல் செய்தாலும் நன்றாக எண்ணிச் செய்வது நல்லது, 'எண்ணித் துணிக கருமம்' என்பது திருவள்ளுவர்

வாக்கு. எல்லாம் அறிந்து அறிவின் வடிவாக (Omniscient) இருக்கின்ற இறைவனை அறிவுநெறியில் அடைந்து உணர்வது சாலச் சிறந்ததெனக் கருதினார் வள்ளலார். எனவேதான் அவருடைய பாக்கள் அருட்பாவாக மட்டும் இல்லாமல் அறிவுப் பாக்களாகவும் திகழ்ந்து கற்றோர் சிந்தையைத் தூண்டி வளரச் செய்தவண்ணம் இருக்கின்றன. வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்னும் ஆறுவகையான அறிவுக் கோட்பாடுகளின் இணைப்பே வள்ளலார் கண்ட சுத்த சிவ சன்மார்க்கமாகும். வள்ளலார் அறிவுக் கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒற்றுமையுணர்வுடன் இணைத்து சிந்தை ஒருமைப்பாடு ( Intellectual integration) ஏற்படுத்திப் பெரும் புரட்சி செய்துள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

''வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாக
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்னும்
மவுனவியோ மத்தினிடை வயங்கு தேவே''

''தோன்றுதவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவிதமாகிச்
சான்ற சுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்றும் இலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளும் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய் தெய்வதமாய் இலங்குந் தேவே''

—மகாதேவ மாலை

வள்ளலார் உணர்ந்துரைத்த பக்தி ஞானநெறியன்றி குருட்டு பக்தியன்று; ஒளி பக்தியே யன்றி இருள் பக்தியன்று.

சமத்துவ நெறி:

உலகத்திலுள்ள மக்களிடையே ஏழை–பணக்காரன், உயர்ந்தவன்–தாழ்ந்தவன், படித்தவன்–படிக்காதவன், நண்பன்–பகைவன், முதலாளி–தொழிலாளி முதலிய வேறுபாடுகள் இருக்கின்றன. இத்தகைய வேறுபாடுகள் சமுதாயத்தைச் சீர்குலைத்து அழித்து

வீடுகின்றன. மல்லிகை, முல்லை முதலிய பூக்களிடையே எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கின்றன. எல்லாப் பூக்களையும் சேர்த்து முறையாகத் தொடுத்துப் பூமாலை யாக்கிய பின் அதன் அமைப்பு கண்ணுக்கு விருந்தளிக்கிறது; மணம் மூக்கிற்கு இன்பம் பயக்கின்றது; பூக்களின் இணைப்பு மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தனித்தனியே இருக்கும்போது பூக்களுக்கு இல்லாத அழகும் வலிமையும் மாலையில் இணைந்திருக்கும்போது ஏற்படுகின்றன. ஒற்றுமையே வலிமை என்னும் பழமொழி இதைத்தான் உணர்த்துகின்றது. பூ மாலையில் பூக்கள் அழகுற இணைந்திருக்கும்போது அவற்றிடையே உள்ள உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை மறந்து சமத்துவம் காணப்படுவதைப்போல் செல்வம், தகுதி முதலியவற்றில் மக்களிடையே எவ்வளவோ வேறுபாடு இருப்பினும் மக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டால் சமுதாயம் செழித்து வலிமையுறும்; எல்லாவற்றிற்கும் மேலாக சமத்துவம் நிலைபெறும்

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுள ராகிஉல கியல்நடத்தல் வேண்டும்''

என்று உளச் சமத்துவத்தின் அவசியத்தை இராமலிங்க சுவாமிகள் நன்கு வலியுறுத்துகின்றார். பணக்காரன் நன்றாக உண்டு கொழுக்கவும் ஏழை பசியால் வாடவும் இவ்விரு வகுப்பிற்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்வையும் பிளவையும் கண்டு மனம் நொந்து பாடுகின்றார். பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வு நீங்கி முழுச் சமத்துவம் நிலைக்க வேண்டும் என்ற தூய எண்ணமும், அந்த எண்ணம் மிகவும் விரைவில் நிறைவேற வேண்டும் என்ற தம் குறிப்பையும் மிகத் தெளிவாகத் தம் பாட்டில் புலப்படுத்துகின்றார்.

''உள்ளலேன் உடையவர் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைந்திடுந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ!
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்!''

மக்கள் உள்ளத்தில் சமத்துவ உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே வள்ளலாரின் விருப்பம்.

நீதிநெறி:

மக்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறுக்கப்பட்ட வாழ்க்கைச் சட்டத்திற்கே நீதி என்று பெயர். நீதி என்பது எப் போதும் நன்னெறியையே குறிக்கும். நீதி தவறும்போது அநீதி யாக மாறுகின்றது. வள்ளலார் வகுத்து வரையறுத்த வாழ்க் கைச் சட்டம் மனித குலம் முழுவதற்கும் முற்றிலும் பொருந்து கின்ற நீதி நெறியாகக் காட்சி யளிக்கின்றது. மனிதர்கள் அனை வரும் இயைந்தும் இணைந்தும் வாழ்கின்ற சன்மார்க்கமே நீதி நெறியாகும்.

''சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே!
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே!''

வள்ளலார் அருட்பாவில் காட்டியுள்ள நெறி நல்வாழ்விற்கேற்ற நீதி நெறி; நல்லொழுக்கத்தின் அடிப்படையில் அமைந்த நல்ல நெறி.

தூய நெறி:

மனம், மொழி, மெய் திரிகரணத்திலும் முழுத்தூய்மையாக இருந் தால் வாழ்க்கை தூய்மையாகத் திகழும் என்பது ஒருதலை. ஒரு வீடு மட்டும் தூய்மையாக இருந்தால் போதுமா? சமுதாயத்தில் ஒரு மனிதன் மட்டும் தூய்மையாக இருந்தால் என்ன பயன்? அகமும் — புறமும் — மனமும் — இனமும் — நண்பரும் — உற் றாரும் தூய்மையாக இருத்தல் வேண்டும். பூவோடு சேர்ந்த நார் மணம் பெறுவதைப் போல உத்தமர் மத்தியில் வாழ்கின்ற வன் உத்தமனாகவே திகழ்வான்.

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே;— நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.''

என்னும் ஔவையார் வாய்மொழியை நன்குணர்ந்த வள்ளலார், நல்லவர் உறவை விரும்பி வேண்டுகின்றார். உடல் தூய்மையும் அகத்தூய்மையின் நற்பயனாய் உடல் நலமும் பெற வேண்டும். பொருளுக்காகவும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் மக்களைப் பாடா

மல் இறைவனது பெரும்புகழைத் தூய மொழியால் பாடுதல் வேண்டும். பொய்ம்மை, மதம், ஆசை முதலிய குற்றங்கள் நீங்கிய தூய மனத்துடன் வாழ வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உத்தமர் உறவு வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, தூய உடல், தூய மொழி, தூய மனம், தூய இனம் ஆகிய நான்கும் வேண்டும். வள்ளலார் காட்டிய தூய நெறி அதுதான்.

''ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்; பொய்ம்மை
பேசா திருக்க வேண்டும்;
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்; மதமான
பேய் பிடியா திருக்க வேண்டும்;
மருவுபெண் ணாசையை மறக்கவேண்டும்; உனை
மறவா திருக்க வேண்டும்;
மதிவேண்டும்; நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்;
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!''

புரட்சி நெறி:

வள்ளலாரின் திருவருட்பாவில் சீர்திருத்தக் கொள்கைகளும் புரட்சிக் கருத்துக்களும் மணம் வீசுவதைக் காணலாம். சாதி, வருணம், சமயம், மதம், இனம், சாத்திரம் ஆகியவற்றை வன்மையாகவும் திண்மையாகவும் கண்டித்து சீர்திருத்த நோக்கத்துடன் புரட்சி நெறியில் பாட்டுக்களைப் பாடுகின்றார். இராமலிங்க சுவாமிகள். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமூலரின் கருத்தே வள்ளலாரின் கருத்தாகும்.

''நால்வருண ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்துப்பார் என்றெனக்கு விளம்பியசற் குருவே''

(தொடரும்)

### பிறர்க்குதவி
## செய்யார்
# பெருஞ்செல்வம்

தி. கோ. பஞ்சாபகேசன், திருவிடைமருதூர்.

**[ 2 ]**

இப்பாட்டின்* பொருள்: வழங்கும் வகையறிந்து வழங்காதான் வைத்திருக்கும் பொருள் தேனுக்குச் சமானமாகும். தேன் மிக்க இனிமையுடைய தாயிற்றே, அதுபோல் அப்பொருள் இன்பம் பயக்கும் இயல்புடையதாகுமோ? அற்றன்று. பின்னை என்னை? அத்தேன் யாவரும் எளிதிற் பெறக்கூடிய மரத்திற் கட்டப்பட்ட தன்று. அம்மரந்தான் யாதோ என்றால், மடற்பனை. தான் தோன்றிய நாள் முதல் மட்டை வெட்டப்படாது உடல் முழுதும் விரிந்திருக்கும் மடல்களை யுடைய பனை மடற்பனையாகும். அப்பனை ஐந்தலை நாகம் உறையும் புற்றின் நடுவில் உள்ளது. அப்புற்று ஆற்றின் இடிகரை அதாவது நீரால் ஊடறுக்கப்பட்ட கரையிலுள்ளது. அக்கரையானது ஊரார் பிணங்களைச் சுடும் சுடுகாடு. அப்புறங்காடு எக்காலத்தும் பிராமணப் பிசாசு உலாவிக் கொண்டிருக்கும் பயங்கரமுடையது. என்னெனில், பிற சாதிப் பிசாசுகள் பிடித்தால் மந்திரம் முதலியவற்றால் நீங்கி விடும். பிராமணப் பிசாசு பிடித்தால் எவ்வாற்றானும் நீங்காது. அக்கொடிய பேய் சதா நடமாடுவது அம்மடற்பனையைச் சுற்றிலும் சூரைச் செடி கொடிய முள் நிரம்பியது. அம்முள் உடலைத் தூண்டில் முள்போலப் பற்றி இழுக்கும் இயல்புடையது. அச்சூரைச் செடி இடையறாது கருங்குளவி சுற்றிக் கொண்

---

*இப்பாட்டென்று குறிப்பிடப்படும் பாடல் துணர் ௫௪ மலர் ௯-இல் முற்பகுதி கட்டுரைத் தொடர் முடிவில் இடம் பெற்றுள்ளது. அப்பாடல் பின்வருமாறாகும்.

> "சுற்றுங் கருங்குளவி சூரைத்தூறா ரியப்பேய்
> எற்றும் சுடுகா டிடிகரையின் புற்றில்
> வளர்ந்த மடற்பனைக்குள் வைத்தேன் ஒக்கும்
> தளர்ந் தோர்க்கொன் றீயார் தனம்"

டிருக்கும் பொல்லாங்கு நிரம்பியது. இவ்வளவு பகைகளையுங் கடந்து சென்று அம்மரத்திற் கட்டியுள்ள தேனை யாரேனும் எடுத்து நுகர்தற்கு ஒல்லுமோ? ஒல்லாதன்றே. அத்தேனைப் போல் ஒருவருக்கும் பயன்படாது மண்ணோடு மண்ணாய் மங்கும் இழிவுடையது, சுற்றத்தார் வறியோர் முதலானோர்க்கு வழங் காதான் பெற்ற பெருஞ்செல்வம்.

செல்வம் படைத்தல் இம்மை இன்பங்களை அனுபவிப்பதுடன் மறுமைக்குத் துணையாகிய நல்லறங்களைச் செய்தற்கன்றோ. 'தனக்கணி தான்செல் உலகத்தறம்' என்பது சான்றோர் வாக்கு. தமிழகத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் எளிய வாழ்க்கையி லிருந்து தொழில் முயற்சியால் பெருஞ்செல்வம் ஈட்டிய பச்சை யப்ப முதலியார், தாம் பெற்ற செல்வங்களை யெல்லாம் பதி புண்ணிய பசு புண்ணியச் செயல்களில் செலவிட்டு இவ்வுலகம் உள்ளளவும் அழியாப் புகழை அடைவாராயினர். இன்னும் இத்தகைய புகழுற்றார் வரலாறுகள் பல உள. ஆதலால், பெருஞ்செல்வம் படைத்தோர், அச்செல்வமும், அதனை அனு பவிக்கும் யாக்கையும் நீரின் அலையையும் நீரில் எழுதிய எழுத் தையும் போல் நிலையாமை யுடையதெனக் காட்சியிற் கண்டு காலமுள்ளபோதே அதனை நல்வழியிற் செலவிட முற்பட வேண்டும். பெருஞ்செல்வம் பெற்றோர் நல்லற வழியில் செல விடாது ஒழிவரேல் அதனைப் பெற்று நல்வழியிற் செலவிட்டோ ருடையதாகவே மதிக்கப்படும். பிறர்க்கு உதவாத பெருங்கடல் நீரை மேகங்கள் முகந்து கொண்டு மழையாகப் பெய்து உலகத் துக்குப் பயன்படுத்தும். அதுபோல, தனக்குரிய நல்லறச் செயல்களில் செலவிடாத உலோபிகளது பெருஞ் செல்வமானது வேறாயிருப்பினும் அதனை நல்லற நெறியில் செலவிடுவோரது செல்வமாகவே மதிக்கப்படும்.

மேகம் கடல் நீரையே முகந்து பெய்யினும் அதனை ''மழைநீர்'' என்று பாராட்டி உலகோர் கொள்வர். அதுபோல நல்வழியில் வழங்காத உலோபிகளது பொருளைக் கைக்கொண்டு பல நன் னெறியில் வழங்குவோரது பொருளாகவே உலகோர் கொள்வர். இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

''பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயல் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு''

என்று நன்னெறியில் கூறியது கொண்டு தெளியலாம்.

———:(o):———

# ஒரு பறவைப் பார்வையில்.........
# தமிழாய்வின்
# ★ தோற்றமும் வளர்ச்சியும் ★

—சி. கோ, தெய்வநாயகம்
எம். ஏ; எம். ஃபில்;

என்று மொழி தோன்றிற்றோ அன்றே ஆய்வும் தோன்றிற்று! எப்படி? மனக்கருத்தினை உணர்த்த ஒலியினை எப்படி இசைத்தல் வேண்டும் எனச் சிந்தித்ததே ஆய்வுதானே! அதுபோன்றே, என்று இலக்கியம் தோன்றிற்றோ அன்றே ஆய்வும் தோன்றிற்று எனலாம். கட்டிய வீட்டிற்கு எட்டுரை கூறும் மனிதர்கள் இல்லையா? அதுபோன்றுதான் இலக்கியமும்—இலக்கியத் திறனாய்வாளனும். அவர்தம் கருத்துக்களே அம்மொழித் திறன் உரை; அல்லது மதிப்பீடு என்பதாகிறது.

மூன் தோன்றிய மூத்த தமிழின் ஆய்வுபற்றிய முழு நூலாகவும் — பழமையான நூலாகவும் இலங்குவது தொல்காப்பியம் ஒன்றே. இந்நூலின் எழுத்ததிகாரம் எனும் பகுதி, தமிழ் எழுத்துக்களின் இயல்பினையும் — மிக நுண்ணியவையான

''அகர இகரம் ஐகார மாகும்
அகர உகரம் ஔகார மாகும்''

''அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை''

என்பன போன்ற எழுத்துக்களின் மெய்மைகளை விளக்குங்காலை **எழுத்தாராய்ச்சியாகவும்,**

சொல்லதிகாரம் எனும், பகுதி தமிழின் பெயர், வினை, இடை, உரிச் சொற்கள் எப்படி எப்படிச் சிறந்த அமைவுகள் உடையன; அவற்றுள் நிகழும் வழக்கியற் குழப்பங்களும் — வழுக்களும் எவ்வெவ்வாறு நீக்கப்பெறல் வேண்டும் என்று குறிப்பிடுங்காலை அக்குறிப்பு ஆய்வுக்கருத்துக்களாகவே அமைய இவ்வதிகாரம் **சொல்லாராய்ச்சியாகவும்**

எழுத்தானாகிய சொல்லா லுணர்த்தப் பெறும் 'பொருள்' [தமிழ்ப் பொருள்] பற்றிய ஆராய்ச்சியாக பொருளதிகாரம் எனும் பகுதி

இறுதிப் பிரிவாக தமிழின் வழக்குஞ் செய்யுளும் எவ்வாறு அமைந்தன? எவ்வெவ் பொருள்கள் எவ்வெவ் விதங்களில் என்னென்ன முறைகளில் பயிலப்படல் சிறந்தது எனும் கருத்துக்கோவைகள் செறிந்து கிடந்து உள்ளதன் நுணுக்கங்களாகக் காட்சிப் பொருளையும்—கருத்துப் பொருளையும் தமிழக மக்களின் மன வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் ஒப்ப உரைக்கும் வண்ணத்தால் சிறந்ததொரு **பொருள் ஆய்வாகவும்** திகழ இம் மூன்று ஆய்வுகளையும் நுவலுகின்றது தொல்காப்பியம். செந்தமிழியற்கையினை அது சிவணிய தமிழகத்தோடு படுத்தி முந்து நூல் கண்டு ஆய்ந்து உரைத்த ஆய்வுரை நூலே தொல்காப்பியம் எனினது வெறும் புகழ்ச்சியன்று; மெய்ம்மையே.

இத் தொல்காப்பியத்திற்கும் முன்னரே தமிழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கான ஏதுக்கள் பலவுள்ளன. தொல்காப்பியத்தின் முதனூல் ''அகத்தியம்''. இந்நூலும் தமிழின் இயல்பினை உணர்த்திய ஒரு நூலேயாம். இவ்வாறு நூல்கள் தமிழாராய்ச்சிக்கென வுள்ளது மட்டுமல்லாது **தமிழாய்வுக் கழகங்களும், தமிழாய்வாளர்களும்** இருந்திருக்கின்றன - இருந்திருக்கின்றார்கள். தமிழ்ச் சங்கங்கள் அற்றை நாளில் கபாடபுரத்திலும் — மதுரையிலும் அமைந்து தமிழில் அவ்வப்போது தோன்றும் நூல்கள், ஆய்வு நூல்கள்தானா? முறையானவைதானா? நல்ல படைப்பா? என்பன குறித்து ஆய்ந்தன.

''பட்டி மண்டபம் பாங்கறிந்து ஏறுமின்'' எனும் தொடர்களும் சமயக் கருத்துக்கள் எவ்வாறு சான்று காட்டி மறுக்கப்பட்டன, என்பதனை நூல்முழுதும் காணலாம். ''**அழிவு முறைத் திறனாய்வு**'' (Destructive criticism) அமைவில் இருந்த காலந் தான் சங்கம் மருவிய காலம் எனலாம்.

பிறகு களப்பிரரின் இருண்ட காலத் தமிழகம், சமண மத அடிப்படையில் ''அன்பு, அறிவு, தொண்டு'' எனும் **வாழ்வியல் நெறித் தத்துவங்களை ஆய்ந்ததில்** கழிந்தது எனக் கொள்ளலாம்.

கி. பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டுவரை ''பக்திக் காலம்'' ஆட்சி புரிகிறது. இக்காலத்தில் சமண—சைவ பௌத்த—சைவ **மதக் கருத்துக்களை அழிவு முறைத் திறன் ஆய்வு அமைப்பில்** இருசாராரும் ஆய்ந்து ஒருவரை ஒருவர் விஞ்ச முற்பட்ட ஆய்வியற் சிந்தனைகள் நிறைந்தன. இதனை சம்பந்தர் — சமணருடனும் பௌத்தருடனும் புரிந்த தருக்கம்

பற்றியும் அப்பர் சமணரை எதிர்த்துச் சைவக் கருத்துக்களைப் பரப்பியமைப் பற்றியும் தேவார அகச்சான்றுகள் புலப்படுத்து கின்றன.

''**சி**லப்பதிகாரத்தின் பழையவுரை'' போன்ற குறிப்புக்கள் கி. பி. 9-ஆம் நூற்றாண்டளவில் தமிழின் ஆராய்ச்சி **சொல் விளக்கந் தருதல், அரும்பொருள் விளக்கந்தரல்**'' என்ற முறையில் அமைந்திருந்தது என்பதைக் காட்டுகின்றது.

''**உ**ரையாசிரியர்கள் காலம்'' எனத் தமிழிற் சிறப்பிக்கப்பெறும் காலம் 10ஆம் நூற்றாண்டு முதல் துவங்கும். அக்காலமே **தமிழின் ஆய்வியல் காலத்தின் பொற்காலம்** என்றிடலாம்.

**தொ**ல்காப்பியத்திற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், பேராசிரியரும், சேனாவரையரும், தெய்வச்சிலையாரும், கல்லாடரும் இன்ன பிறரும் தத்தம் குறிப்பிற்கேற்ப உரைகண்டனர். ஒவ்வொரு நூற்பாவிற்கும், சொல்லிற்கும் '' இன்னின்ன பொருள்தான்'' என தத்தம் ஆய்புலத்திற்கேற்பப் பொருண்மை கண்டனர். இவ்வுரைகள் சிலவிடங்களில் ஒருங்கிணைந்தும் பல்லிடங்களில் ஒன்றோடொன்று முரணியும் காணப்படுவதே இவை **தனிப்பட்ட சிந்தனை** ஆய்வுகள் (Independant research thoughts) என்பதனைப் புலப்படுத்துகின்றன.

**சி**வஞானமுனிவர் கண்ட ''தொல்காப்பிய பாயிர சூத்திர விருத்தி'' எனும் பிற்காலத்திய (16ஆம் நூற்) நூல், **மேலாய்வுச் சிந்தனைகளின் வழியாகக் கண்ட ஒரு நிறைவாய்வுச் சிந்தனையின் வழியதாகும்** இந்நூலின்கண் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட இளம்பூரணரின் கருத்துக்களையும், நச்சினார்க்கினியரின் கருத்துக்களையும் மறுப்பதோடு மட்டுமல்லாது திருக்குறளாய்வர் பரிமேலழகியாரின் கருத்துக்களையும் மறுத்துத் தம் நுண்ணிய ஆய்வுச் சிந்தனையை சிவஞான முனிவர் வெளிப்படுத்துவது தமிழின் ஆய்வியற் சிந்தனையை விளக்குவதாகும்.

**ந**ன்னூலிற்கு மயிலைநாதரும், சங்கர நமச்சிவாயரும் கண்ட உரைகள் இத்திறத்தன. இதனைத் தொடர்ந்து இலக்கணக் கொத்து, இலக்கணவிளக்கம், இலக்கணவிளக்கச் சூறாவளி எனும் இலக்கண நூற்கள் தொல்காப்பியம், நன்னூல், அணி நூல்கள் முதலியவற்றின் **பொருளாய்வு நூல்களாகத்** திகழ் கின்றன.

(தொடரும்)

# *காஞ்சிப் பாட்டு

—K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

## [2]

சித்தாந்தத் தெளிவைக் காட்டும் இப்பாடல், தெரிதற்குரிய பொருளாகிய பாசப் பிணிப்புப் பொருள்களைக் கூறி, அவை எவ்வாறு தெரிதற்கரிய பதிப்பொருளின் பேரின்பத்தை, பசு (நின்) எனும் சீவான்மாவுக்குப் பெறவொட்டாது இடைநின்று நிற்றலைச் சுட்டிக்காட்டி, பதி—பசு-பாசமெனும் முப்பொருளுண்மையினது இயல்புகளை முறைபடக்காட்டிடும் செவ்வியினை யுடையது. உரம் வாய்ந்த மெய்யுணர்வினை வழங்கும் 'நின்னொடு முன்னிலை எவனோ' எனும் தொடர் மக்களுயிர்களின் இயல்பைக் கூறி, அதனானே அவ்வுயிர்களை பேரின்பத்தி லாழ்த்தும் கடவுளின் சிறப்பியல்புகளைக் குறிப்பித்து உணர்த்தும் பொருண்மைக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளது. காட்சிக்கிலக்காகாத கடவுட் பொருள், மக்களுக்குத் தோன்றாத் துணையாய் நின்று மிளிர்வதை இத்தொடர் நாட்டும் வகையும் தெருளற்பாலது. ஐம்பொறிகளானும் இன்பமென விழையும் நுகர் பொருட்களையும் அவற்றைத் துய்த்தற்கிடமாய மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய அந்தக் கரணங்களையும் ஒருங்கு கூட்டி யருளிய இறைவனை உறுதியாய நன்றியறிவுடன் நினைக்கும் கடப்பாட்டின் உரிமையோடு உறவு பூணும் பழக்கம்பற்றி மெய்யன்பர் ஒழுகின், அப்பேரருளாளர் தானே அணுக்கராய் வெளிவந்து தன்னைக் காட்ட, அம்மெய்யன்பரும் பிறவித் துயர்கெட அவ்வருளாளரை நினைந்து நினைந்து மனமுருகப் பற்றி நிற்கும் போதுண்டாம் மெய்யருள் ஞானம் தலைப்பட பேரின்பச் சுவை தனைப் பெறுவர். உயிரனுபவ வாயிலாக இச்சுவைதனைப் பெறுவர் பிறவார். இது மதிநுட்பம் நூலோடுடையராய மருதனாரது சித்தாந்தத் தெளிவு.

பாண்டிய மன்னனுக்கு, உலக நிலையாமைகளை அறிவுரையாலும் அறவுரையாலும் பலபடியாக வற்புறுத்தி பேரன்போடு அவன் மனங் கொள்ளுமாறு திருவோண நாளில் இயல்புடன் கூறியருளியதில் ஒரு பொருண்மைக் கருத்து ஒளிர்வதுடன் ஒளிந்

*துணர் ௫௫, மலர் க பக்கம் 10இன் தொடர் கட்டுரை.

துள்ளது அறிந்துணரற்பாற்று. அசுர இயல்பால் அச்சுறுத்தி இடுக்கண் விளைத்து உலகாண்ட மாவலி மன்னனை ஒடுக்க. குறள் வடிவாய் எழுந்த மாயோன் பிறந்த நாள் ஓணத்திருநாள் ஆகும். இத்திருநாளைக் கொண்டாடுவதின் கருத்து யாதெனின், அஃது எத்துணைப் பெருஞ்செல்வங்களும், வியக்கத்தக்க வலிமையும் பெற்றார், மெய்ப் பொருளினை யுணர்ந்து புகரறு சிறப்பினை யுடைய தெய்வத் தன்மையினையும், தவப்பேறினையும், நோற்றலின் ஆற்றலால் பெறாராயின், பெற்ற செல்வம் யாவும் சிதைந்து – அழிந்து வலிமையும் ஒடுங்கும் என்பதாகும். ஓணத்தான் அடக்கிய மாவலியின் வரலாற்றால் பெறக்கிடக்கும் உண்மையாய மெய்ப்பொருளை மருதனார் மன்னனுக்கு நினைவூட்டியது சிந்தித்துணர்ந்து மகிழ்தற்குரிய அருமைப்பாடுடையது. இதனை,

''கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாள்'' (590–591)

என மாங்குடி மருதனார் மொழிந்துள்ளதினான், அவர்தம் தவ ஞான சீலத்து நலனும், உலகினை நல்வழிப்படுத்துந் திறனும் புலனாம். மற்றும் அவர் அருணிலைக்கண் விளங்கும் தவஞானச் சிறப்பினை எத்துணை நுட்பமாக வுணர்ந்து தெளிந்துள்ளா ரென்பதும் பெறப்படும்.

அறிவாற்றலுக்குத் தக, மெய்யுணர்வினையும் இறைநிலையினையும் புலனாக்கிக் கொண்டே போகும் இப்பாட்டின் உள்ளுறை, மங்கலத் தகுதி வாய்ந்து விருந்தாதற் பொருட்டு இப்பாட்டினை 'ஓங்கு திசை' என மருதனார், எக்காலும் வாழ்விக்க வல்லதாகிய மங்கல மரபு பற்றி தொடங்கி யுள்ளாரென்பது கோடல் வேண்டும். பரந்துபட்ட ஓசை அமைதியுடன் பொருள் விளங்கச் செல்லும் இப்பாட்டு மாறுதல் உறாதிருப்பதில் உறுதியையும் மாறுதல் உறுவதில் உறுதியின்மையையும் புலனாகும்படி வஞ்சியடிகள் மிக்கு விரவிய ஆசிரியப்பாவால் கருத்திற்கும் உணர்ச்சிக்கு மேற்ப அமைந்துள்ளது. இந்த யாப்பு முறை அறிவுத் துறையில் மனதை இயங்கச் செய்யும் பெற்றிமை யுடையது.

''ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிரம் ஆகும்; இழிபு மூன்றடியே''

என்பது தொல்காப்பியம். ஆசிரியப் பாவுக்கு அடுத்தது வஞ்சிப் பா யென்பது, பா வகைப் பற்றிக் கூறும்

''ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற்று என்ப பாவகை விரியே'

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலும் பெறப்படும். உள்ளத்தில் உள்ளியதை சிதைக்காதும், குறைக்காதும் அப்படியே தெளிவாக விளங்கும்படி எடுத்துக் காட்டுவதற்கு ஏற்றது ஆசிரியப் பாவாகும். அதற்கு ஒட்டிய இனப் பாவாகவும் வனப்பாகவும் விளங்குவது வஞ்சிப் பாவே யாதலின், ஆசிரியப்பாவில் வஞ்சியடிகளைப் பயன்படுத்தப் பட்டுள்ள முறை தெளியப்படும். இம் முறையின் இயல்பு, நிறைந்த பொருட் செறிவினையும் பயன் தரும் கருத்துக்களையும் குறைந்த சொற்களில் தேக்கி அமைத்துக் காட்டுவதாகும். மற்றும் அவைகளை நன்கு அறியுமாறு பயன்படுத்தி மனப்பாடமாக வைத்துக் கொள்ளவும்' கற்பதனால் பெரும் பயனை எய்துவிக்கவும் ஏற்றது. மனம் கற்பனைச் சூழலில் நின்று உணர்ச்சி அலையில் மயங்கி ஊறுபடாதும், உணர்ச்சி வலையில் சிக்குறாதும் அறிவுத்துறையின்கண் அமைதியொடு சிந்தித்து இயங்க இத்தகைய யாப்புமுறை சிறந்ததாகும். இஃதோடமையாது இம்முறை பாட்டினிலே பெறப்படும் நிலையாமை உணர்ச்சியினைச் சிதறாமல் காக்கும் ஆற்றல்சான்றதாய அரணாகவும் விளங்குவதாகும். எனவே இப்பாட்டின் யாப்பமைதி முறையின் பண்பறிந்தோர் இன்பஞ் சுரக்கும் சொற்சுவையின் எளிமையினையும் பொருட்சுவையின் இனிமையினையும் ஓசை நயங்களையும் மிடுக்கும் செறிவும் விரவிய நடையினையும் இலக்கிய கண்ணோட்டத்துடன் திறம்பட உணர்வா ரென்பதில் ஐயமின்று.

காஞ்சிப் புலவராய மாங்குடி மருதனார், பாட்டின் தொடக்கத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனாகிய பாட்டுடைத் தலைவனின் சீர்த்தியின் சிறப்பு விளங்குமாறு தொன்மையுற்ற பாண்டிய மரபில் தோன்றிய அவனது முன்னோர்களின் கீர்த்திப் பெருமையோடு இயைத்து, அன்னாரது இயல்புகளையும், குலமுறை பற்றிய உண்மைக் குறிப்புக்களையும் நிரல்பட வரலாற்றுணர்வுடன் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.* தென்னவன் தொல்லிசை நட்ட நெடுங்குடியனைப் பற்றி இங்ஙனம், ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி'யராய மருதனார், புலப்படுத்துங் காலை, பாட்டுடைத் தலைவனை

''நல் லூழி யடிப் படரப்
பல் வெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக! [21—23]

என்றும்,

*History indeed is the writness of the time. the light of truth. —Cicero.

''தென்னவர் பெயரிய துன்னருந் துப்பிற்
தொன்முது கடவுள் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந! [40—42]

எனவும்,

''நிலந் தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்! [60—61]

என்றும் மும்முறை விளிக்கப் படுவதினான், இவ்விளித்தல் பாண்டிய மரபில் பிறப்புற்று அரசாண்ட முன்னோர்களை முறையே குறிப்பதாகு மென்பது முடிந்த முடிபாகுவதற்கு ஆய்வு இன்றியமையாதது. அழகாற் சிறந்த பொருள்களைத் தன்மை நவிற்சி நெறியில், உள்ளது உள்ளவாறு ஒழுங்குபட வைத்து ஓவியமாக நுண்ணறிவால் விளக்கிக் காட்டும் திறமை, மாங்குடி மருதனாரது இயற்கைப் புலமை இயல்புக்கும் புகழ்மைக்கும் ஒரு நந்தா மணிவிளக்காகும். ஈண்டு 'மருக' எனவும் 'உம்பல்' எனவும் வந்துள்ள சொற்கள் 'வழித் தோன்றல்' என்ற பொருட் குறிப்புடையன. 'பின்னர் மேய பொருந' என்பதும் உயர்ந் தோர்கள் தோன்றிய குடியிற் பின் பிறந்தவனே எனவும் பொருள் படும். மருதனார், (நல்லூழி அடிப்படர பல வெள்ளக் காலம் உலகாண்ட) பாண்டிய மன்னர்களை முதற்கண் உயர்ந்தோர் என பொதுப்படக் கூறி பின்னர் 'தொன்முது கடவுள்' எனவும் 'நெடியோன்' எனவும் சிறப்புபற்றி குறித்த காரணத்தால், பாண்டிய மரபில் தோன்றியவர்களையே அவ்விளிச் சொற்கள் குறிப்பதாகவே அமையும் என்பதும் ஆய்தற்குரியது.

மதுரைக் காஞ்சிப் பாட்டுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், தன் உரை மூலம் அப்பாட்டின் அழகு நலத்தைச் சுட்டிக் காட்டி கவிச்சுவையினையும் உணர வைத்ததோ டமையாது, நூலாசிரிய ரது கருத்தோடு தனக்குத் தோன்றும் சிறந்த கருத்தையும் காட்டு வது, இவரது சீரிய நோக்கமாகும். உரையாசிரியர் நச்சி னார்க்கினியர் 'நெடியோன்' என்பதற்கு திருமால் எனப் பொருள் கூறினும், நெடுங்காலம் ஆட்சி புரிந்த நிலந்தரு திருவிற் பாண்டியன் எனப் பொருள் கோடலே சாலச்சிறந்தது. என்னெனின், இப்பாட்டின்கண் இடையிடையே உணர்த்தப் பட்ட நெடுஞ்செழியனது முன்னோர்களாகிய பாண்டியர் மூவரில் நிலந்தரு திருவிற் பாண்டியன் ஒருவராவர். 'தென்னவன் பெயரிய ... ... ... தொன்முது கடவுள்' என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'இராவணனைத் தமிழ் நாட்டை யாளாதபடி போக்கின, கிட்டுதற்கரிய வலியினை யுடைய பொதியின்மலையி

லிருக்குங் கடவுளாகிய பழமை முதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாய் இருத்தற்கு மேவின ஒப்பற்ற வனே' என உரையும் 'இராவணன் தென்றிசை ஆண்டமை பற்றி தென்னவன் னென்றார் ... ... ... இராவணனாளுதல் தொல்காப்பிய பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரை யான் உணர்க ... ... ... அகத்தியனைத் தென்றிசை யுயர்ந்த நொய்ம்மை போக, இறைவனுக்குச் சீரொப்ப இருந்தா னென் பது பற்றிக் கடவுளென்றார் ... ... ... இதனால் அகத்திய னுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினார்' என்பது போன்ற சில சிறப்புரைகளையும் குறித்துள்ளார்.

சிறப்புரையாய் குறித்துள்ளவற்றுள்ளே, அகத்தியர் இராவண னைத் தமிழ் நாடாளாதபடி போக்கினார் என்பது தொல்காப்பிய பாயிரத்தில் 'பொதியின்க ணிருந்து இராவணனைக் கந்தரு வத்தாற் பிணித்து ஆண்டு வாராமை விலக்கி' என விளக்கப்பட் டுள்ளது. இசைக்குருகப் படுசிலைப் பாவை பதமிவையே பண்டு பாடுகவே' என வரும் தஞ்சை வாணன் கோவை 345 அடிக ளுக்கு, சொக்கப்ப நாவலர் 'இராவணனைப் பிணிக்க குறுமுனி பாடுமிசைக்கு உருகப்பட்ட பொதியின் மலை' என்ற விசேடக் குறிப்பினைத் தந்துள்ளது இங்கு கருதற்பாலது. மற்றும் சோன சைலமாலை 26-ம் பாடலில் 'இனிய பைந்தமிழின் பொதியமால் வரை போலிசைக் குருகாது' என்ற சிவப்பிரகாச முனிவரது கூற்றும் உளங்கொளற்பாற்று. இதனான் இராவணன் பொதி யத்தின்கண் தங்கியபோது அவனைப் பிணித்து தென்னாட்டை விட்டு அகற்ற வேண்டி, அகத்திய முனிவர் கந்தருவத்தைப் பாட, அவ்விசைக்கு பொதிய முருகி அவனைத் தன்னுள்ளே அகப்படுத்திக் கொண்டது என்ற வரலாறு புலனாகுதல் காண்க. இதனை இராவணனாளுதல் பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானு முணர்க' என நச்சினார்க்கினியர் குறிப்பிட் டுள்ளார். 'உரையாசிரிய ரென்னும் பெயர்க்குரியராக இது போழ்து கருதப்படும் இளம்பூரணர் உரையில் இச்செய்தி காணப் படாமை ஆராய்ச்சிக்குரியது' என்றதால், அகத்தியர் இராவண னைப் பிணித்த வரலாறு இதுபோழ்து தெளிவுற விளங்கிட ஏது இல்லை.

இனி 'தென்முது கடவுட் பின்னர் மேய ... ... ... பொருப்பிற் பொருந' எனும் சொற்றொடரால் 'அகத்தியனுடன் தலைச் சங்கப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினார்'

என்பதும், 'இச்செய்தியை இறையனா ரகப்பொருள் முதற் சூத்திர உரையினா லறியலாகும்' என்பதும் நச்சினார்க்கினியரது கருத்தாகும். இதன்படி, அகத்தியர் தமிழ் நாட்டிலிருந்து தென்னவனாகிய இராவணனை ('தென்னவன் மலையெடுக்க சேயிழை நடுக்கங்கண்டு' — திருக்கச்சி மேற்றளி தேவாரம்— அப்பர்) அகற்றி, தமிழ் நாட்டைப் பாண்டியனுக்குப் பின்பு அளித்து, பாண்டியனுக்குத் தமிழறிவுறுத்தும் ஆசிரியராய் வயங்கினார் என்பது போதரும். இஃது அரைதரு மேகலை மன்னாயன்ற கத்தியன் வாய், உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதன்' என்ற இறையனார் களவிய லுரை மேற்கோள் செய்யு ளான் (89) உணர்ந்து கொள்ளப்படும். இக் காரணங்களான் 'தொன்முது கடவுட் பின்னர்மேய, வரைத்தா ழருவிப் பொருப் பிற் பொருந' எனப் பாண்டியன் சிறப்பாக்கப்பட்டான் என்பது நச்சினார்க்கினியரது கருத்து. சிலப்பதிகாரத்துள் வேட்டுவ வரி யின்கண் வந்துள்ள

''மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறை யுயர் பொதியிற் பொருப்பன்''

என்ற அடிகளுக்கு, உரை வரைந்த அரும்பதவுரை யாசிரியர் 'மறைமுதல்வன் — மாதேவன். இவன் பின்னர் — அகத்திய னாகிய கடவுள்' எனப் பொருள் கொண்டார். அடியார்க்கு நல்லாரோ, மறைமுது முதல்வனை, முதிய மறையை யுண் டாக்கிய பிரமன் எனக் கொண்டு, பிரமனுக்குப் பின்னோன் குறுமுனி யென உரையிட்டார். சிலப்பதிகாரத்துச் சொல்லமைப் பின் அமைதியையும் பொருட் போக்கும் மதுரைக் காஞ்சியோடு ஒத்திருப்பதினான், நச்சினார்க்கினியர் மதுரைக் காஞ்சியின் சிறப்புரையில் தென்னவனென்னும் பெயர் கூற்றுவனுக்கு ஆதல் பற்றி, கூற்றுவனை உதைத்த கடவுளென்று தென்னவனை இறைவனாக்கி அவனுக்குப் பின்னரென்று அகத்தியன் என பொருள் கூறத் தலைப்பட்டு அது பொருந்தாமையினையும் உணர்த்தி யுள்ளார். மற்றும், நச்சினார்க்கினியர், இனி 'முத் தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கா, லிப்போழ்து போழ் தென்றது வாய்ப்பக் கூறிய, வக்கடவுண் மற்றக் கடவுள் (கலித் தொகை 93: 11–3) என இருடிகளையும் கடவுளென்று கூறிய வாற்றானும் காண்க' எனவும் குறிப்பாக உணர்த்தி யுள்ளார். ஈண்டு உரைகள் எவ்வாறெல்லாம் அமைவுடைத்தலின்றி முரணு தல் காண்க.

கூர்ந்து சிந்திக்கின், நச்சினார்க்கினியரது உரை, பொதுவாக எக் காலத்துக்கும் உரியதாய் கல்வி கேள்வி அனுபவம் முதலிய

# தமிழில் மரபு மீறல்கள்

செஞ்சொற் கொண்டல், தமிழாகரர்
டாக்டர். சொ. சிங்காரவேலன்,
எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

## பழந்தமிழ் மரபுகள்:

'மரபு' மாற்றுதற்குரிய ஒன்றன்று என்று குறித்த தொல்காப்பியர், அந்த மரபுகள் பலவற்றையும் தொகுத்துப் பேசுகின்றார்; அவ்வியல் பொருளதிகாரத்தின் ஒன்பதாவது இயலாகவும், தொல்காப்பியப் பெருநூலின் நிறைவு இயலாகவும் 'மரபியல், என்ற பெயரோடு விளங்குகின்றது. அவ்வியலில், முதல் நூற்பாவின் முதல் வரி மரபின் சிறப்பை உரைக்கின்றது.

''மாற்றருஞ் சிறப்பின் மரபியல்''

(தொல்: 1500)

இதனால் மாற்றுதற்கு அரியது மரபு என்பதும், அத்தகு சிறப்பு உடையது அஃது என்பதும், அதனைக் கிளந்துரைப்பது அவ்வியலின் அடிப்படை என்பதும் ஆகியன பெறப்படும். ஆயினும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சில மரபுகள் தடம் மாறிப் போனதுமுண்டு என்று உணர்தற்கு அந்நூலிலேயே சான்றும் கிடைக்கின்றது; அவற்றை --மருவி முடிந்த வழக்குகளைத் தொல்காப்பியரும் தொகுத்து வழங்குகின்றார்; அவற்றைக் 'கடிந்திட இயலாது' என்றும் முடிவை உரைக்கின்றார்.

''குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்

---

வற்றால் முகிழ்க்கும் அறிவில் படிந்து புதுமையாயத் துடிப்புடன் உணருமாறு கற்பிக்க செய்யும் வகை கொண்டு விளங்குவதாகும். எனவே நச்சினார்க்கினியரது உரையால் பாட்டின் பல்வேறு சுவை பற்றிய அறிவும், உண்மைச் சிறப்பியல்பும் கவிதைப் பண்பும் பொலிவுறத் தெளிவாகுதலோடு அதனொடு புதுப் பொருள்களும் புலனாகும்படி அவ்வுரை, அகத்தெழுச்சியைத் தூண்டி, மேன்மேலும் பாட்டினை அறியவும் உணரவும் பெருந்துணை புரிவதைக் காண்குவம். (தொடரும்)

வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த அவ்வழக்கு உண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே''

(தொல்: 1568)

'அவ்வழக்கு உள்ளமையால், கடியலாகா' என்று காரணமும் காட்டித் தெளிவுபடுத்தும் உறுதிப்பாட்டை இந்நூற்பாவின் கடையடிகள் இரண்டும் பெற்றுத் திகழ்கின்றன.

மரபு தழுவுக:

மரபு தழுவிய வழக்கே மனம்கொண்டு ஒழுகத் தக்கது என்றும் மேலும் விளக்கமாக உரைப்பது தொல்காப்பியர் திருவுள்ளம் என்பதைப் பின்வரும் நூற்பா தெளிவாக்கும்.

''நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை யைம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்''

(தொல்: 1589)

இந்நூற்பாவின் பின்னிரண்டடிகளைக் கூர்ந்து நோக்கினால், ஆசிரியர் கூற விழையும் கருத்து புலனாகும். இலக்கண நெறிக்கு வழுவாத வகையில் பொருள் திரிபு இல்லாத சொற்களைத் தழுவி யுரைக்கும் போக்கையே ஆசிரியர் அவாவுதல் இதனால் புலப்படுகின்றது.

செய்யுள் மரபுகளை மாற்றாமை:

உயர்ந்தோர் வழக்கே மரபுகளாக மலர்தலால், அத்தகு மாண்புடைய மரபை மீறுதல் செய்யுளுக்கு இல்லை என்று கூறி, அதன் முதன்மையை விளக்கும் பின்வரும் மூன்று நூற்பாக்களும் மறவாது போற்றற்குரியன:

''மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான''

''மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்''

''வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாகலான''

(தொல்: 1590, 1591, 1592)

### தொல்காப்பியப் புறநடைகள் காட்டும் விரிந்த மனம்:

இவ்வாறு மரபிற்கு இன்றியமையாமை தந்து ஆசிரியர் பேசினாலும், கண்களை மூடிக்கொண்டு அவற்றைக் கட்டிக்காத்தல் ஒன்றையே அவர் வேண்டினார் என்று கொள்ளலாகாது; மரபிலிருந்து மலர்ந்த சிறப்பினை மனங் கொண்டாராயினும், காலப் போக்கில் நிகழும் மாற்றங்களும் அவற்றிடை நேரலாம் என்பது அவர் உணராததன்று; அந்த மாற்றங்களைப் புறக்கணிக்கக் கூடாது என்பதும் தொல்காப்பியர் திருவுள்ள மாகும். இஃது எப்படித் தெளிவாகின்றது? எனின் ஆங்காங்கு அவர் வழங்கும் புறநடை நூற்பாக்களால் தெளிவாகும் உண்மை இது. வரையறுத்து ஓதினாலும் கூட, அவற்றிற்கு மேல் வந்து வழங்கும் சிறப்புடையன உளவாயின் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் ஆணை வழங்குகின்றார் பெருந்தன்மை மிக்க அவ்விலக்கணப் பேராசிரியர்:

''புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏனைய வெல்லாம்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப்பா டிலவே'' (தொல்: 202)

''உணரக் கூறிய புணரியல் மருங்கின்
கண்டு செயற்குரியவை கண்ணினர் கொளலே''
(தொல்: 405)

''கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்'' (தொல்: 483)

என்பது எழுத்திலக்கண அமைப்பில் ஆசிரியர் அருளுள்ளம் வெளிப்படும் புறநடை நூற்பாக்கள் ஆகும்.

இவ்வாறே சொல்லதிகாரத்து ஆசிரியரின் பெருந்தன்மை பிறங்கும் நூற்பாக் கட்டளைகள் பல:

''கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே''
(தொல்: 781)

''அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்

வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றாத்
திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே''
(தொல்: 780)

''அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்'' (தொல்: 879)

மூன்றாவதாக விளங்கும் பொருளதிகாரத்து, ஆசிரியரின் விரிந்த உள்ளம் வழங்கும் நூற்பாக்கள் பலவற்றிலும் இப்பண்பட்ட இயல்பினைக் காணலாம்:

''செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவஉள எனினும் வந்தவற் றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே''
(தொல்: 1499)

''சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே'' (தொல்: 1610)

## 'விருந்தும்' 'எதிரது போற்றலும்' காட்டும் விழுமிய பண்புகள்:

ஆசிரியரே 'விருந்து' என்ற புதிய யாப்பு வகையைத் தழுவி இலக்கணப் படுத்தியுள்ளார் (தொல்: 1495). உத்தி வகைகளில் 'எதிரது போற்றல்' என்ற ஒன்றை ஆக்கியிருக்கின்றார் (தொல்: 1610). ஆதலால், காலப்போக்கில் வரும் சில மரபு மீறல்கள் ஆசிரியராலேயே தழுவிச் செல்லப்படும் போக்கினைக் காண்கின்றோம். இலக்கிய வரலாற்றைப் பயில்வோர் பல பழந் தமிழ் மரபுகள் மாறி மலர்ந்துள்ள போக்கினைக் காலந்தோறும் காணலாம்; அவை பிழைபட்டவை என்று மேம்போக்காக முடிவு கட்டல் பொருந்தாது. கால வளர்ச்சிக் கேற்ப நம் மொழித் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் படிகள் என்று அவற்றைக் கொள்ளுவதே பொருந்தும். சிந்திக்கத் தெரிந்த மனிதன் பல்

வேறு நிலைகளிற் கண்ட புதுமைப் போக்கின் பிழம்புகள் அவை என்று கருதுவது ஏற்றது.

அகப்பொருள் மரபு மாற்றம் மற்றொன்று:

தலைவியைக் கண்டு தலைவனுக்கு ஏற்படும் ஐயமே பழந்தமிழிற் பேசப்பட்டது; தலைவனின் பேரழகில் ஈடுபட்ட தலைவிக்கும் 'ஐயம்' விளைவதாகப் பெரிய புராணக் காப்பியம் பேசுவது அறிவு வளர்ச்சியையே காட்டுகின்றது. மடலேறுதல் பெண்ணிற்கு இல்லை என்று அகத்திணை மரபு வகுத்த தொல்காப்பியரும், காமத்துப் பால் கண்ட செந்நாப்புலவரும் கூறுகின்றனர்.

''எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான''
(தொல்: 981)

''கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்''
(திருக்குறள்: 1137)

இந்த மரபிற்கு மாறுபட்ட போக்கை இடைக் காலத்து ஆழ்வார்கள் திருவாக்கிற் காணலாம் திருமங்கை யாழ்வாரின் சிறிய திருமடல் (76–87) பெரிய திருமடல் (147–149). இந்த மாற்றம் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் ஆதலின் ஏற்றுக் கொள்ளப்பட்ட தாகலாம் என்பர் ஆய்வறிஞர்.*

மற்று மொரு மாற்றம்:

சங்ககாலம் தொடங்கிச் சேக்கிழார் காலம்வரை 'மன்னன் உலகின் உயிர்' என்று கூறும் மரபு இருந்து வந்தது. ''யான் உயிர் என்பது அறிகை, வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே'' (புறம்: 186)என்று கூறும் புறப்பாடல் முதல், கண்ணும் ஆவியும் ஆம் பெருங் காவலன்'' (பெரிய: நகரச்-14) என்று கூறும் பெரிய புராணப் பாடல் வரை இருந்தக் கருத்தை கம்பன் மீறி,

''செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயினான்''
(பால: அரசியல்–10)

என்று பாடுகின்ற வழக்கைக் காண்கின்றோம். மக்களைக் கட்டளையிடும் உயிராகவும், செயற்படும் அரசனை உடலாகவும் மாற்றுகின்ற பொழுது 'குடியாட்சி' முறையின் மலர்ச்சியே இந்த மாற்றத்திற்கு அடிப்படை யாகும் என்று கருதப்படுகின்றது.†

*வடமொழி, ஆங்கிலச் சார்பினால் விளைந்தவை:*

இவ்வாறே வெண்பா, வஞ்சி, கலி, ஆசிரியம் என்ற நால் வகைப் பாக்களிலேயே பாடுகின்ற மரபு மெல்ல மெல்ல மாறி வடமொழிச் சார்பினால் விளைந்த விருத்தங்களில் பெருங் காப்பி யங்களையே படைக்கின்ற போக்கும் வளர்ந்து விட்டமையைக் காண்கின்றோம். தொண்ணூற்றாறு வகையான சிற்றிலக்கிய வகைகள் அனைத்தும் புதிய வடிவமைப்பு முயற்சிகளின் வெற்றி களே என்றால் தவறாகாது. ஆங்கில இலக்கியச் சார்பினால், இன்று பெரிதும் பரவிநிற்கும் தமிழிலக்கியப் புதினங்கள், சிறு கதைகள், புதுக்கவிதைகள், அனைத்தும் புதிய சிந்தனைகளை யும், தமிழிலக்கிய வளர்ச்சி வேகத்தையும் காட்டுவதுடன் என் றும் இளமை ததும்பும் தமிழ் மொழியின் மாறாத பெரு வளத் திற்கும் சான்றாக நிற்கின்றன.

*மரபு மீறல்கள் —*
*வளர்ச்சிப்படிகள்—புதிய மலர்கள்:*

தொல்காப்பியர் கண்ட அகத்திணை புறத்திணை மரபு மீறல்கள் பலவற்றை இடைக்காலப் பிற்கால இலக்கிய நூல்களிலும், சில இலக்கணப் பனுவல்களிலும் காணுதற்குரிய காரணம் இதுவே யாகும். காலந்தோறும் இலக்கியம் வளர்கிறது; சிந்தனைகள் புதிது புதிதாகத் தோற்றம் கொள்கின்றன. ஆதலால், அவை மலர்ந்து வரும் புதிய போக்கின் 'அடையாளங்கள்' என்றும், 'வளர்ச்சிப் படிகள்' என்றும் கொள்ள வேண்டும்.

> ''தொன்மைய வாம்எனும் எவையும் நன்றுஆகா; இன்று
> தோன்றிய நூல்எனும் எவையும் தீதுஆகா''
> (சிவப்பிரகாசம்: அவையடக்கம்)

என்று திருவருளில் தோய்ந்த சைவ சித்தாந்தப் பனுவற் பேரா சிரியர் உமாபதி சிவனாரே உரைப்பாராயின் வேறு சான்று வேண்டுவதில்லை. இவ்வாறே இன்று தோன்றும் இலக்கிய மரபுகள் சிலவும் எதிர்காலத்தில் மாறலாம்; மாறக்கூடும். அவற்றைப் பொறுமையுடன் எதிர்கொண்டு வரவேற்பதே நடுவு நிலைமை பிறழாத இலக்கியக் கோட்பாடாளர்க்கு அழகும் இலக்கணமும் ஆகும். அந்நெறியே இலக்கிய வளர்ச்சிக்கு வழி வகுக்கும் இனிய நெறி.

★ ★ ★

---

*—டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், இலக்கிய அணிகள் ப-ம். 154 (1972)

†பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், ''இலக்கியக்கலை'' (1960) ப-ம். (36-37)